1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : (அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டம் 1959 பிரிவு 92(2)ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் ரூபாய் ஆயிரத்திற்கு மேல் ஆண்டு வருமானமுள்ள, இந்து சமய நிறுவனங்களிடமிருந்து ஆண்டொன்றிற்கு $1\frac{1}{2}$ சதவீதம் வீதம் கேட்பு பிறப்பித்து சம்பந்தப்பட்ட உதவி ஆணையரால் சரக ஆய்வர் மூலமாக ஆலய நிர்வாகிகளுக்கு சார்வு செய்யப்பட்டு தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) நிலுவையில் உள்ள தொகை (31—12—1983 நிலவரப்படி) ரூ. 47,10,768.

(இ) அவ்வப்போது ஆணையரால் உதவி ஆணையர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டும், முகாம் செல்லும்போது நேரில் அறிவுறுத்தப்பட்டும், மாதவாரியாக அறிக்கை கேட்கப்பட்டும், அவைகளின் திறனாய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டும், தீவிர வசூல் இயக்கம் மூலமாகவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

திருவரங்கத்தில் அறநிலையத் துறையின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் திட்டம்

471 —(*வினா எண் 17964) திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் அறநிலையத்துறையின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

(இ) அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழவில்லை.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS